
# சிறுவர் சிந்தனைத் தமிழ்



JPL
C13172

வீரசிங்கம் பிரதீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

000043

# சிறுவர் சிந்தனைத் தமிழ்

(கவிதைத் தொகுப்பு)

பொது சன நூலகம்
10 JUN 2020
யாழ்ப்பாணம்

வீரசிங்கம் பிரதீபன்

276663

131172 CC

KOHA JPL

வெளியீடு
அன்னலீலா கலைக்கூடம்
வவுனியா.

276663 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
94.8111

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சிறுவர் சிந்தனைத் தமிழ் |
| நூலின் வகை | : | சிறுவர் கவிதைகள் |
| நூலாசிரியர் | : | வீரசிங்கம் பிரதீபன் |
| வெளியீடு | : | அன்னலீலா கலைக்கூடம்<br>077 2461865 |
| பக்கங்கள் | : | 68 |
| பிரதிகள் | : | 300 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| அட்டைப்பட ஓவியம் | : | எஸ்.கௌரீஷன் |
| முதற்பதிப்பு | : | ஜனவரி, 2019 |
| தொடர்பு | : | இல: 09, 4ஆவது ஒழுங்கை,<br>சாந்தசோலை வீதி,<br>மகாறம்பைக்குளம், வவுனியா. |
| அச்சகம் | : | விஜய் அச்சுப் பதிப்பகம்,<br>077 9009491 / 024 2225799 |
| ISBN | : | 978-955-06821-2-6 |
| விலை | : | 200/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பால்ய வயதில் என்னைத் தன் மடிமீது வைத்து,
அன்பு பாராட்டி, கல்விக் கண்ணைத் திறந்து வைத்த
எனது ஆசிரியை

**அமரர்.பண்டிதை,**

**செல்வி.தில்லைநாயகி இராசரத்தினம்**

அம்மையாருக்கு இந்நூல்

**சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சிறுவர்களின் உலகமே என்றும் குதூகலத்தை உண்டாக்குவதாக இருக்கும். சிறுவர்களிடம் பழகும் போது, அவர்களைப் போன்று பால்ய வயதுக்குச் சென்று விட்ட கற்பனை எம்மிடம் உருவாவதுண்டு. அவர்களின் மழலை மொழியிலும், கள்ளங்கபடமற்ற வெள்ளைச் சிரிப்பிலும் தம்மை மறந்து (கவிதை படைத்து,) பாடல்களை இயற்றிய பாவலர்கள் அநேகர்.

"ஓடி விளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா ஒரு
குழந்தையை வையாதே பாப்பா..."

போன்ற பாரதியாரின் பாடல்கள்,

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே..."

என்ற நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் பாடல்களைப் போன்றதான சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களிடம் மட்டுமன்றி, பெரியவர்களிடமும் பெருமதிப்பு பெற்றிருக் கின்றன.

பூமியில் பிறந்து, வளர்ந்து உலகத்தை அவதா னிக்கும் பிள்ளைக்குத் தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளையும் உற்று நோக்கி, அவற்றின் பெயர்கள், பயன்கள், ஆபத்துக்கள் போன்றவற்றையும், இசை யோடு சொல்லிக் கொடுக்கும் வகையில் சிறுவர் இலக்கியங்கள் விளங்குகின்றன. இதன்மூலம் சொல் வளத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் அனைத்து மொழிகளிலும் சிறுவர் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கான இசை மிகவும் எளிதாக அமைக் கப்பட்டு, எளிமையான சொற்பிரயோகத்தைக் கொண்ட தாக அவை உருவாக்கப்படுகின்றன. கடுஞ்சொற்கள், சொற்றொடர்கள் என்பன இங்கு தவிர்க்கப்படுகின்றன. ஒரு குழந்தையின் சுற்றாடலில் காணப்படும் பொருட்கள். வகுப்பறையிற் காணப்படும் பொருட்கள், நிறங்கள், எண்கள், மாதங்கள், விழாக்கள், உறவினர்கள் போன்று பலவற்றையும் கொண்டதாக இவ்வாறான சிறுவர் பாடல்கள் அமைகின்றன.

திரு.வீரசிங்கம் பிரதீபன் அவர்கள் எழுதிய சிறுவர் பாடல்களின் தொகுப்பு, எமது பண்பாட்டை மறக்காமல், கடவுள் வாழ்த்து, தமிழ்மொழி வாழ்த்து என்பவற்றைக் கொண்டதாகக் காத்திரமான படைப்பாக இருப்பதில் பெருமகிழ்ச்சியாக இருக்கிறது. இன்றைய தொழில் நுட்பமும், சொகுசு வாழ்க்கை முறையும் நற்பழக்க வழக்கங்களை மறைத்து விட்ட நிலையில் அவற்றை இந்தப் புத்தகத்தில் கொண்டு வந்து சேர்க்கவேண்டும் என்று எண்ணிய அவரது சிந்தனை பாராட்டுக்குரியது. அவரின் முதல் வணக்கத்துக்குரிய "முந்தி விநாயகர்" அவரது முயற்சிகள் அனைத்திற்கும் முன்நின்று வெற்றியை வழங்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

சிறுவர்களுக்குப் பெற்றோரின் மீது உள்ள பாசம் அளவிட முடியாதது. ஒருவன் வளரும் காலத்தில் அவனுக்குப் பெற்றோரால் வழங்கப்படும் உதவி, அறிவுரைகள், பாதுகாப்பு உணர்வு என்பவற்றை வேறெந்த கல்வியாலும் வழங்கிவிட முடியாது. தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு தெரிந்த உலகைப் பார்க்கும் ஒருவன், முதன் முதலில் பெற்றோரையே தனக்கு வழி காட்டியாக எடுத்துக்கொள்வான். அவர்களின் தொழிலும், பழக்க வழக்கங்களும் அவனுக்கு எதிர் காலத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமையும்.

*"அன்னை தந்தை இருவரதும்*
*அடிபணிய ஆசை..."*

என்று அவர்கள் விரும்புவதை எழுதிப் பிள்ளைகளின் அபிலாசைகளை உணர்த்தியிருக்கிறார் பிரதீபன்.

இந்தப்புத்தகத்தில் இடம்பெறும் பாடல்கள் ஓரளவு வளர்ந்து, சுமார் ஐந்து வயதைக் கடந்துவிட்ட, தமது மூளையின் 85 சதவீதத்திற்கும் மேற்பட்ட வளர்ச்சியைக்கொண்ட சிறுவர்களுக்கு உரியதாக அமைந்திருக்கின்றது. வெறுமனே பொருட்களை அறிமுகப்படுத்துவதாக இல்லாமல், சில விடயங்களைத் தாமாகத் தேடிக்கொள்ளும் ஆவலும் அங்கு புலனா கிறது. அவ்வாறு தேடலைக் காண்பிக்கும் பாடலாக...

"ஆத்திசூடி கொன்றை வேந்தன் அறிந்திடவே ஆசை" என " "சிறுவர் எமது ஆசை" என்ற பாடலிலும் மற்றும் "தாத்தாவும் பாட்டியும்" பனம்பழம்", "விளையாட்டு" "தங்கத்தாத்தா", "பெய்யாதோ பெரிய மழை", இயற்கை அன்னை", "தம்பளப் பூச்சி", "மரங்களைக் காப்போம்" போன்ற பாடல்களிலும் காணப்படுகின்றன.

ஏழு வயதில் ஒரு குழந்தைக்குப் போதியளவு அறிவு வளர்ந்துவிடும், ஒவ்வொரு விடயத்தையும் தர்க்க ரீதியாக சிந்திப்பதற்கு அது முனைந்துகொள்ளும். அந்த வயதில் காரணம் சொல்வதைப் போன்று இருக்கும் பாடல்களைக் கேட்பதற்கு விரும்புவார்கள். அதற்குத் துணைபோகும் வகையில் பின்வரும் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ளன.

"கொன்று உயிரை வதைத்திடாது ஒன்று படுவோம்
கோபம், பகை இவை நீக்கி ஒன்றுபடுவோம்
குன்றுத் தொடர் போல உயர் எண்ணங்கள் கொண்டே
ஒன்றுபடுவோம் நாமும் ஒன்று படுவோம்.

இந்த வயதினருக்கான புத்தகங்களில் அறிவுரைகள் கட்டாயமாக இடம்பெறுதல் வேண்டும்.

"தினைத் துணை நன்மை பிறர்செய்து விடினும் அதைப்
பனைத் துணையாகக் கொள்ளக் கூவு குயிலே"

என்று திருக்குறளை நினைவுபடுத்தியும்,

பரிவு, பாசம், அரிய நேசம்
கொண்ட கோழிக்குஞ்சுகள்
பிரிந்திடாமல் ஒன்றுபட்டால்
உண்டு வாழ்வென்று கூறுதே

என்று "கோழியும் குஞ்சுகளும்" என்ற பாட்டிலும்,

"வெட்டியபனை மீண்டும் தளிர்த்ததுண்டோ? நாமும்
தட்டிய பண்பாடு மீள்வதுண்டோ"

என்று "முற்றது ஒற்றைப்பனை" என்ற பாட்டிலும்,

"கூடிவாழும் அன்றில் போல
குணம் படைத்த செருப்புத்தான்
ஒன்றுபோனால் வாழ மறுக்கும்
இணைபிரியா ஜோடிதான்"

என்று "செருப்பு" எனும் கவிதையிலும் குறிப்பிடப்பட்டி - ருப்பது புத்தகத்தை மேலும் பெறுமதி வாய்ந்ததாக்கு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கன்றாக பயமறியாது இருக்கும் அந்த வயதில், யாரையும் உற்று நோக்கவும், கேள்வி கேட்கவும் தயாராக இருக்கும் நிலையில் புகைபிடிப்பவர்களைக் கண்டிப்பதைப் போன்றதாக "வெண் சுருட்டு" கவிதை அமைந்திருக்கிறது.

"ஒவ்வொரு குழந்தையையும் பார்க்கும்போது இறைவன் இன்னமும் மனிதனால் விரக்தியடையவில்லை என்ற செய்தி கிடைத்திருக்கிறது" என்று சொல்லிய நோபல் பரிசுபெற்ற இந்தியாவின் கவிஞர் ரவீந்திரநாத தாகூர் அவர்களின் மொழி நினைவுக்கு வருகிறது. ஆனால், அந்த இறைவனை இவர்களை வைத்தே நோகடிக்கும் நிலை இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்று இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் முக்கியமான விடயம் சிறுவர் துஷ்பிரயோகம். இதைப் பற்றி அறிவுறுத்தல்கள் பரவலாகச் சிறுவர்களிடம் வழங்கப்படும் இந்தக் காலத்தில் "வீரக்கும்மி" என்ற பாடல் அற்புதமான பங்களிப்பை ஆற்றியிருக்கின்றது.

"கண் ஒத்த செந்தமிழ்ப் பாட்டாலே - நீயும்
மின் ஒத்த வேகத்தில் கும்மியடி
சின்னஞ் சிறார்களைச் சீரழிக்கும் - அந்த
சீர்கெட்ட மாந்தரை விரட்டியடி"

என்று பிரதீபன் எழுதிய வரிகள், பெண்கள் சீரழிக்கப்படுவதைக் கண்டு பொறுக்காமல்,

"நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோம் என்று கும்மியடி"

என்று பாடிய சுப்பிரமணிய பாரதியாரின் வரிகளை நினைவு படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதயத்திற்குத் தேவையான கல்வியை வழங்காமல் அறிவுக்கு மட்டுமே உரித்தாகும் கல்வியினால் எந்தப் பலனும் கிடையாது"

என்று சொல்லிய கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்ரோட்டில் அவர்களின் வரிகள் இப்போது நினைவுக்கு வருகின் றன. இன்றைய போட்டியான உலகில் பிள்ளைகளைச் சுயாதீனமாக இயங்கவிடாது, சிந்திக்கவிடாது வலிந்து செலுத்தப்படும் கல்வி, ஓரளவேனும் பயன்பட வேண்டு மாயின் இவ்வாறான பாடல்களின் மூலம் சிறுவர்கள் வளப்படுத்தப்படவேண்டும்.

காலத்தின் தேவையறிந்து இவ்வாறான பாடல்களை எழுதுபவர்கள் போற்றப்பட வேண்டிய வர்கள். அந்தவகையில் வவுனியா பிரதேசத்தின் கலாசார உத்தியோகத்தரான வீரசிங்கம் பிரதீபன் அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. சிறுவர் பாடல்கள் சொல்வளத்தை முக்கியமாகக் கொண்டு எழுதப்படு வதால் இன்னமும் நிறைய புத்தகங்களை இது சார்ந்தவையாக திரு.வீ.பிரதீபன் அவர்கள் வெளியிட வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள் கிறேன்.

எமது மொழியின் இலக்கியங்கள் காலங்கடந்தும் வாழட்டும். வாழ்க தமிழ்!

**திருமதி.மைதிலி தயாபரன்**
எழுத்தாளர்,
பிரதம, பிராந்திய மின் பொறியியலாளர்,
மன்னார், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநெறிப்புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி அவர்கள் வழங்கிய வாழ்த்துப்பா

இசையுடன் பாடிடும் படி ஒன்றாம்
அரு மருந் தன்ன இக் கவிதைகளை
நசையுடன் நாடுவர் சிறுவர்களும்
நற் குணம் யாவையும் பெற்றிடுவர்
திசை யுள எட்டுத் திக்குகளும்
தனி மணம் வீசிடக் கூடியதாம்
அசை போட்டுப் பாடல்கள் பாடிடலாம்
அறிவுள்ளவர் ஆகவும் ஆகிடலாம்.

வள்ளுவன் பாரதி தம்கருத்தை
வடித்திடும் பாடல்கள் சுவையுடைத்தாம்
கள்ளுக்கு மேலாம் போதை தரும்
கவிதைகள் படைப்பவர் கவிஞர்களாம்
எள்ளினுள்ளே எண்ணெய் அதுபோல
இருப்பது தானே கவிதை என்பார்
கள்ள மில்லாத சிறுவர் கட்கே
களி தரும் பாடல்கள் மிக உளதாம்.

இன்னமும் இவர் பல எழுதிடவே
இறைவன் திருவருள் தர வேண்டும்
கன்னலாய், தேனாய், கற்கண்டாய்
கவிதை என்றால் அது இருந்திடுமே
நன்னலம் பெற்றிவர் வாழ்க வென்று
நன் மனம் கொண்டுமே வாழ்த்திடுவேன்
வன்னியின் புகழுள் ஒருவரென
புரிந்திட வேண்டும் இன்னும் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

தமிழில் சிறுவர் இலக்கியங்கள் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. சங்க இலக்கியங்களில் புறநானூறு, ஆங்காங்கே சிறுவர் சிந்தனைக்கான குறிப்புக்களைத் தருகின்றது. பின்வந்த திருக்குறளோ மக்கட் பேறுபற்றி விதந்துரைக்கின்றது. தொல்காப் பியரும்.

"குழவி மருங்கில் கிழவதாகும்"

என்கின்றார்.

எனினும் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களிலேயே சிறுவர் இலக்கியத்தின் தெளிவு தோன்றுகின்றது எனலாம்.

தமிழ் இலக்கியப் பரப்பில் புலவர்களும், கவிஞர் களும் இப்பாடுபொருளை முன்னிலைப்படுத்தியே வந்துள்ளனர். அவர்கள் வரிசையிலே ஆழ்வார்களும், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், சிறுவர் இலக்கியப் போக்கிற்கு வடிவம் தந்தோர் ஆவார். இவ்வகையில் ஈழத்தில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களை சிறுவர் இலக்கிய முன்னோடி எனலாம்.

இன்று, பல கவிஞர்கள் இவ்விலக்கிய வளர்ச் சிக்கு அணி சேர்த்து வருகின்றனர். ஆயினும், போதிய பங்களிப்பு ஈழத்தில் சிறுவர் இலக்கியத்திற்கு இருப்பதாக தெரியவில்லை.

இச்சிறுவர் இலக்கியத்தினை, பாலர் பாடல், சிறுவர் பாடல் என்ற இருவகையில் நோக்கலாம். அவ்வகையில், இக்கவிதை நூல் சிறுவர்களை மனங் கொண்டு என் சிந்தனையில் உதித்தது எனலாம். தொழில்நுட்பமும், விஞ்ஞானமும் போட்டியிட்டு உலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிக்கும் இவ்வேளை, பல்வேறு கவனக் கலைப் பான்களால் சிறுவர் சிந்தனை மாறுபடுவது கண்கூடு. இவ்வகையில் தமிழர் தம் பாரம்பரியங்களை சிறுவர் அறிந்து கொள்ளும் நோக்குடனும், விளிப்புணர்வுத் தன்மையினை தெளிந்து கொள்ளும் நோக்குடனும் இக்கவிதைகள் உருப்பெற்றன. ஆதலால், பாரம்பரிய கருத்துக்களும், சீர்திருத்த சிந்தனைகளும் கவிதைக ளில் கூடி வந்துள்ளன.

இன்று, பல பிரதேச வாரியான தமிழ்ச்சொற்கள் அவற்றின் அர்த்தம் தெரியாது அழிந்து வருகின்றன. அச்சொற்களும் கவிதைகளில் இடம்பெறுகின்றன. அச்சொற்களுக்கான கருத்து விளக்கங்களும் அருஞ் சொற்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவரின் சிந்தனைக்கு இடம்கொடுக்க வேண்டும். என்ற வகையில் இந்நூலை "**சிறுவர் சிந்தனைத் தமிழ்**" என்ற பெயரில் அன்பார்ந்த சிறார்களே உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூல் உருவாக எனக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்க ளுக்கும், நூலை ஒப்புநோக்க உதவிய திரு.நா. தியாகராசா அவர்களுக்கும் எனது நன்றிகள். இக் கவிநூல் அழகிய சித்திரங்களைத் தாங்கி வர உதவிய திரு.சந்திரஹாசன் மற்றும் திரு.கௌரீசன் ஆகியோ ருக்கு என்றும் நான் நன்றியுடையேன்.


மேலும், இந்நூல் வெளிவர ஆலோசனைகள் வழங்கியதோடு, அணிந்துரையும் தந்துதவிய தங்கை, எழுத்தாளர் திருமதி.மைதிலி தயாபரன் அவர்களுக்கும், இந்நூலை அழகுற வடிவமைத்து நூலாக்கிய விஜய் அச்சுப் பதிப்பகத்தினருக்கும் எனது நன்றிகள்.

**வீரசிங்கம் பிரதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி வெண்பா



முற்றும் தமிழ்பாட முழுமுத லாகி நின்றாய்
சற்றும் அறியாது நான் சாற்று தமிழ் மாலை
கற்கும் மழலைகளைக் காத்தருள வேண்டுமென்று
பொற்புடைய குஞ்சரமே போற்றுகிறேன் ஐங்கரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க தமிழ் மொழி

இராகம்: சிம்மேந்திரமத்திமம் தாளம்: ஆதி

வாழிய நம்தமிழ் வளமிகு செந்தமிழ்
வாழிய! வாழியவே!

அகத்தியன் நாவினில் அரன்சிவன் அருளிய
அருந்தமிழ் வாழியவே!

நாவலம் தீவெனும் நன்னிலத்தே வளர்ந்த
நந்தமிழ் வாழியவே!

வேங்கடம் குமரியில் பெருவரம் பாய்நின்ற
வெல்தமிழ் வாழியவே!

மறவராம் மூவேந்தர் மடியினில் தவழ்ந்திட்ட
மகிழ்தமிழ் வாழியவே!

குறளுடன், காப்பியம், திருமுறை என வளர்
குலத்தமிழ் வாழியவே!

பண்டைய எம் ஈழ மண்ணிலே நிலைத்திட்ட
பண்தமிழ் வாழியவே!

வாழிய நம் தமிழ் வளமிகு செந்தமிழ்
வாழிய! வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்கோர்வை


| | |
|---|---|
| மழலைகள் | 01 |
| சிறுவர் எமது ஆசை | 03 |
| நாம் இலங்கையர் | 05 |
| எம்மதமும் எம் மதம் | 07 |
| ஒன்றுபடுவோம் | 09 |
| மரங்களைக் காப்போம் | 11 |
| வெண்ணிலவே | 13 |
| விபத்து | 15 |
| பாட்டியும் தாத்தாவும் | 17 |
| தங்கத் தாத்தா | 19 |
| வீரக் கும்பி | 21 |
| ஆலமரம் | 23 |
| இயற்கை அன்னை | 25 |
| முற்றத்து ஒற்றைப்பனை | 27 |
| கூவு குயிலே | 29 |
| செருப்பு | 31 |
| பனம் பழம் | 33 |
| தம்பளப் பூச்சி | 35 |
| கோழியும் குஞ்சுகளும் | 37 |
| பெய்யாதோ பெரிய மழை | 39 |
| தைப்பொங்கல் | 41 |
| கூண்டுக்கிளி | 43 |
| விளையாட்டு | 45 |
| வெண்சுருட்டு | 47 |
| இராவணன் | 49 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 JUN 2020






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகள்

சிறு நண்டு போல் வந்த
சிறுவர்களே கேளும்!
சீரான வாழ்வு பெற
சிந்திப்போம் வாரும்.

அழகு உலகு எனத்தேடி
அவதரித்த சேய்காள் !
அனுதினமும் நல்லவற்றை
அறிந்து ஒன்று சேரும்.

மனிதரிலும் மிருகங்கள்
பல உண்டு பாரும் !
மறுக் கொண்ட மனிதர்களை
சேராது வாழும்.

சிந்திப்பீர்! சிறுசுகளே
சீரழிய வேண்டாம் !
சீராக ஆண்டிடவே
சிறப்போடு வாரும்.

எமக்கெனவே பரந்திருக்கும்
இவ்வுலகு பாரும்!
எத்திசையும் எமதாகும்
என்றுழைக்க வாரும்

சேய் - குழந்தை
மறு - குற்றம்
அனுதினம் - ஒவ்வொரு நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் எமது ஆசை

சின்னஞ் சிறிய பாலர் எமக்குச்
சின்ன சின்ன ஆசை!
பென்னம் பெரிய மனிதர் முன்னே
சொல்ல வந்தோம் கேளீர்!

அன்னை தந்தை இருவரதும்
அடி பணிய ஆசை!
ஆசானை மதித்து அவர்
வழி நடக்க ஆசை!

பொன் போன்ற தாய் மொழியைப்
பேணிடவே ஆசை!
போற்றுகின்ற பணிவு கொண்டு
வாழ்ந்திடவே ஆசை!

மூத்தோரை மதித்து நன்மை
கேட்டிடவே ஆசை!
ஆத்திசூடி, கொன்றை வேந்தன்
அறிந்திடவே ஆசை!

பிறந்த மண்ணைக் கும்பிட்டு
உயர்ந்திடவே ஆசை!
பிறர் பொருளில் ஆசையின்றி
வாழ்ந்திடவே ஆசை!

ஆசான் - ஆசிரியர்
அடி - பாதம்
வள்ளுவர் வாய்மொழி - திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இலங்கையர்


சாதி, மத, பேதமற்ற
மனிதர் நாங்களே
சந்தோசம் பொங்க வாழும்
மாந்தர் நாங்களே
இலங்கை அன்னை பெற்றெடுத்த
மக்கள் நாங்களே
இன்பம் பொங்க ஒன்றுபட்டு
வாழ்ந்திடுவோமே...

இனங்கள், மத மொழிகள் தாமும்
வேறு பட்டாலும்
மனித நலன் பேணி
ஒன்று கூடிடுவோமே
கனி தமிழும், சிங்களமும்
எம் மொழியாமே
கருத்தினிலே சோதரராய்
கலந்து கொள்வோமே.

பிரிவினைகள் அற்ற எங்கள்
வாழ்வு தன்னிலே
பிறந்த மண்ணும் பெருமையோடு
வாழ்த்தி நிற்குமே
பல அரிய சாதனைகள்
பாரில் நிகழ்த்தியே
இலங்கையராய் அன்போடு
அகிலம் வெல்லுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாந்தர் - மக்கள்
கனி - இனிமை
பார், அகிலம் - உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மதமும் எம் மதம்

சீராய் வாழ்வு தந்திட்ட
சீரோன் நாமம் பணிவோமே
பேராய் நாமும் வாழ்ந்திடவே
பெரிய பிறவி தந்தாரே!

சிவனும், யேசு அல்லாவும்
சிறப்பாய் புத்த பகவானும்
கூறும் உண்மை ஒன்றாகும்
குறைகள் இல்லை அவர்சொல்லில்

அருமை மனிதர் நாமாவோம்
அன்பு வழியே சமயமென்போம்
பேதம் அதிலே ஏன் வேண்டும்
பெரிய உண்மை அறிவீரே !

ஓதும் பைபில் குர் - ஆனும்
பேசும் பகவத் கீதை தானும்
நாதன் புத்தன் அருள்மொழியும்
நமக்கே என்று கொள்வோமே.

சமயம் என்பது வழியாகும்
அதிலே நடந்து கரைசேர்வோம்
எமையே ஆளும் சமயங்கள்
எல்லாம் ஒன்று எனக்கொள்வோம்.

சீரோன் - இறைவன்
சீர் - ஒழுங்கான
பேதம் - வேறுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபடுவோம்

ஒன்றுபடுவோம் நாமும் ஒன்றுபடுவோம்.
அன்பினாலே இன்பமுற ஒன்றுபடுவோம்.
கன்று பசுவின் அன்பு போல ஒன்றுபடுவோம்.
காகம் கூடி உண்பது போல் ஒன்றுபடுவோம்.


கொன்று உயிரை வதைத்திடாது ஒன்றுபடுவோம்
கோபம், சினம் நீக்கி நாங்கள் ஒன்றுபடுவோம்.
குன்றுத் தொடர் போல் உயர் எண்ணங்கள் கொண்டே
குறைவிலாது யாவருமே ஒன்றுபடுவோம்.

எறும்புக் கூட்டம் போல நாமும் ஒன்றுபடுவோம்.
இனிய எண்ணம் கொண்டு நாமும் ஒன்றுபடுவோம்.
கரும்பு போல இனிய மொழி பேசியே நாமும்
களவுத்தொழில் நீக்கி விட்டு ஒன்றுபடுவோம்.

இரும்பு போன்ற மனித இயல்பை போக்கியே நாமும்.
இன்பம் காண இன்று முதல் ஒன்றுபடுவோம்.
துரும் பெனினும் பல்லைக் குத்த உதவும் என்பதால்
உருவம் கண்டு கேலி செய்யாது ஒன்றுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களைக் காப்போம்

உலகினைப் பாதுகாக்க
உயர்வான வழி யுண்டு
மரங்களை நாட்டுதல்
தானே அவ்வழி !

வறட்சியின் கொடுமையை
வராது நாம் தடுக்கவே
மரங்களை நாட்டியே
வளம் பல காணலாம்.

இயற்கை நீர் ஒழுங்கினை
இதமாகப் பேணியே
இனிய மழைச் செல்வத்தை
தருபவை மரங்களே!

காடழித்தோம் நாம்
நாடு காண வேண்டியே
நாடு கண்டு என் பயன் ?
நலிவுற்றோம் வெப்பத்தால்.

ஓசோன் படலம் அது
ஓட்டையாய் போனது
ஒரு மரம் நாட்டுவோம்
இயற்கையோடு வாழுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

276663





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலவே

அந்தர வானத்திலே
ஆடிவரும் வெண்ணிலவே !
ஆம்ஸ்ரோங் அடிபதித்த
அழகிய வெண்ணிலவே !

லைக்கா நாய் வந்து
கண்ட உன் எழில் தனை
நிலவாய்ப் பொழிந்திடும்
அழகே ஒரு தனி

மாந்தர் தம் பிறப்பினில்
இன்பமும் துன்பமும்
மாறிவருமென்று நீ
தேய்ந்து வளருகின்றாய்

வஞ்சகப் பூமி தான்
செய்கின்ற சதியினால்
மாதத்தில் ஒருமுறை
மறைகிறாய் முழுமையாய்

நிந்தனை செய்வோரின்
வகையது கருதாமல்
நன்னயம் செய்யவே
முழுநிலவு தருகிறாய்

வஞ்சகம் - வஞ்சனை, தீமை
நன்னயம் - நன்மை
லைக்கா - சந்திரனுக்கு முதலில் அனுப்பப்பட்ட நாய்

131722CC
KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்து

அண்ணன் மாரே ! அக்காமாரே !
அன்புடனே கேளும்
வீதி வழி செல்கையிலே
விழிப்புடனே நடவும்.

வீதிகளில் சமிக்ஞை உண்டு
உற்றுநோக்கிப் பாரும்
விழிகள் மூடி ஆபத்தை
விலைக்கு வாங்க வேண்டாம்.

உந்துருளி செலுத்தும் எங்கள்
அன்பு அண்ணன் மாரே
தலைக்கவசம் கட்டாயம்
அணியவேண்டும் நீரே.


வேகம் வி வேகம் அல்ல
தெரிந்திடுவீர் நீரும்
வளைவுகளில் முந்துவதை
விலக்கிக் கொள்ள வேண்டும்.

செல்லிடத்து தொலைபேசி
காதில் வைத்துக் கொண்டு
வண்டியோட்டும் சாரதிகாள்
வீடு சேர மாட்டீர்.

விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு
விதிகள் உண்டு பாரும்
விதிகளை நீர் கடைப்பிடித்து
விபத்து இன்றி வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உந்துருளி - மோட்டார் சைக்கிள்
தலைக்கவசம் - கெல்மட்
சமிஞ்சை - அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியும் தாத்தாவும்

பண்புக் கதைகள் சொல்லித் தரும் பாட்டி
பட்டம் எல்லாம் கட்டித் தருவார் தாத்தா
இன்பமாகப் பள்ளிக்கூடம் நான் செல்ல
இனிய அப்பம் சுட்டுத் தரும் பாட்டி.

அன்புடனே அழைத்துச் செல்லும் தாத்தா
அருகிருந்தே அரவணைக்கும் பாட்டி
துன்பமுற்ற வேளையிலே எந்தன்
துயரம் தீர்க்கத் துள்ளியாடும் தாத்தா.


உம்மா மறந்த தாலாட்டுப் பாட்டை
சும்மா பாடித் தூங்க வைக்கும் பாட்டி
ஐயோ! குளிர் என்றொதுக்கும் வேளை
வெந்நீர்ப் போட்டுக் குளிக்க வைக்கும் தாத்தா.

பாசம் ஊட்டிப் பாலும் தந்த பாட்டி
நேசத்தோடு முத்தமிடும் தாத்தா
பேசும் பெரிய பேறிதன்றி வேறோ
காணும் உலகில் கடவுள் தாத்தா பாட்டி.

நேசம் - அன்பு
பேறு - கொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கத் தாத்தா

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

ஆடிப் பிறப்பொடு கத்தரி வெருளியும்
பாடிக்காட்டிய தங்கத் தாத்தா!
நாடி நவாலிக் கிராமத்திலே தோன்றி
நாம் படிக்கத் தமிழ் தந்த தாத்தா!

பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் கட்டி
அதில் தானே பயணித்து வந்த தாத்தா!
பாவலர் பாடிய பாக்களுக்கே அடி
கோலிக் கொடுத்தவர் எங்கள் தாத்தா!


நெற்றியில் தூய வெண்நீறுடன் நீண்ட
வெண் பஞ்சுத் தாடியும் கொண்ட தாத்தா!
ஆடியும் பாடியும் நாம் மகிழப் பல
அரிய செந்தமிழ் தந்த தாத்தா!

மண் மணக்கும் அவர் பாக்களிலே நல்ல
சைவத் தமிழ் மணம் மேன்மையுறும்!
சீரான செந்தமிழ்ப் பாட்டிடையே பெரும்!
சீர்திருத்தக் கொள்கை தேடி வரும்!

பாவலர் - கவிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரக் கும்பி

கும்மியடி பெண்ணே கும்மியடி - நீயும்
குனிந்து நிமிர்ந்து கும்மியடி.
எம்மைப் பிடித்த பிசாசுகளை - நீயும்
விரட்டி விரட்டி க் கும்மியடி!
- கும்மி


கண் ஒத்த செந்தமிழ்ப் பாட்டாலே - நீயும்
மின் ஒத்த வேகத்தில் கும்மியடி
சின்னஞ் சிறார்களை சீரழிக்கும் - அந்த
சீர் கெட்ட மாந்தரை விரட்டியடி!
- கும்மி

வாள் கொண்டு வேல் கொண்டு கும்மியடி - பிறர்
வாழ்வை அழித்தோரை வெட்டியடி.
பாழ் பட்டுப் பண்பா டழிக்க வந்த - அவர்
தூள் பட்டுப் போகவே கும்மியடி!
- கும்மி

கூட இருந் துடன் குழி பறிக்கும் - அந்தக்
குள்ள நரிகளைத் தூக்கி யடி.
நாகரிகம் எனும் மோகக் கதை - கூறும்
ஈனரைக் கட்டியே போட்டு மடி!
- கும்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலமரம்

அற்புத வனத்தில் ஒரு ஆலமரமாம்
அழகுடன் கிளை பரப்பி ஓங்கி நின்றது
மந்தி யினம் தொங்கி விளை யாடி வரவே
நீண்ட பெரு விழுதுகள் தாங்கி நின்றது
- அற்புத

கொம் பிடுக்கில் குருவி யெல்லாம் கூடு கட்டியே
மா நகரம் போல ஒலி பெருக்குகின்றன
தாவும் அணிற் கூட்டமெல்லாம் கூடி மகிழவே
மா பெரும் மைதான மாகி நின்றது
- அற்புத

கொஞ்சுங் கிளிக் கூட்டமெல்லாம் உண்டு மகிழவே
செம் பழங்கள் உணவாகத் தாங்கி நின்றது
தும்பி யினம் ரீங்காரம் பாடி வரவே
தூய தென்றல் ஆலமரம் தேடி வந்தது
- அற்புத

கோல மயில் நடனமிட்டு ஆடி வரவே
ஆல மரம் நிழல் தந்து மேடையிட்டது
மந்தை யினம் மயில் நடனம் பார்க்க வந்தே
மண்டியிட்டு மர நிழலில் சேர்ந்து கொண்டன
- அற்புத

நாளும் மரம் செய்து விட்ட நற் செயல்களை
பாரும் பயன் வேண்டாத ஆலமரம் தான்
கருமம் செய்து பயன் வேண்டா அந்த மரம் போல்
உள்ளம் கொண்டு வாழ்ந்து விட்டால் துன்பமில்லையே
- அற்புத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை அன்னை

இயற்கை அன்னை அழகு கண்டு மகிழ்ந்திடுவோமே
இன்பமாக நாங்கள் கூடி ஆடிடுவோமே
பஞ்சபூத அழகிலே நாம் மயங்கி விட்டாலே
பாரெல்லாம் அன்பு பொங்க வாழ்ந்திடலாமே.

பூமித் தாயின் மடியில் தவழ்ந்து ஆடிடுவோமே
புதிய புதிய சிந்தனைகள் தேடிடுவோமே
காடு, மலை சோலை எங்கும் கலந்திடுவோமே
கழனி வயல் தோறும் அழகு கண்டிடுவோமே.

நீலக் கடல் ஓரமெல்லாம் அலைகளின் ஆட்டம்
நீள்கதிரும், அம்புலியும் இயற்கை வினோதம்
கால மகள் புள்ளி வைத்துப் போட்டதோர் கோலம்
கண்டு மனம் தெளிவு கொள்ள நல்ல பாடம்.

புற் தரவை கரம்பை எங்கும் மந்தைகள் கூட்டம்
மந்தி, மயில் இனங்களெல்லாம் பெரிய கொண்டாட்டம்
மனித வாழ்வின் அவலங்கள் போக்கிட வேண்டின்
இயற்கை அன்னை தந்த பாடம் கற்றிடலாமே.

பஞ்சபூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.
கரம்பை - காட்டு வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

276663





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்து ஒற்றைப்பனை

முற்றத்தில் நின்றதோர் ஒற்றைப் பனை - அது
முன்னையோர் வரலாறு கூறும் பனை
பச்சை நிறம் மிகு ஓலை கட்டித் தலை
வாரி முடித்ததோர் ஒற்றைப் பனை.

நூறு வயதினைத் தாண்டும் பனை - அது
நூறாயிரம் கதை கூறும் பனை
கேளடி எங்களின் பாட்டன் கதை அதைக்
கூறுமடி அந்த ஒற்றைப் பனை.


கழுத்தினிலே நுங்குத் தாலி கட்டி - மிகக்
கறுத்துப் பொலிந்ததோர் ஒற்றைப் பனை
உருவத்தில் நிமிர்ந்து ஓங்கி நின்றே பலர்
உருவிற்கு உணர்வினைத் தந்த பனை.

கருப்பணி கள்ளுடன் திருப்பொலியப் - பல
பானங்கள் தந்ததும் அந்தப்பனை
சொந்தப்பனை எங்கள் பந்தப் பனை அதைக்
காணவில்லை சில காலமதாய்.

வெட்டியே வீழ்த்தினோம் பனை மரத்தை - கூட
கட்டியே காத்த எம் பண்பாட்டை
வெட்டிய பனை மீண்டும் தளிர்த்ததுண்டோ நாமும்
தட்டிய பண்பாடு மீள்வதுண்டோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூவு குயிலே

கூவு குயிலே! கூவு குயிலே!
சிந்தை மகிழ்ந்தே நின்று கூவு குயிலே!
கூவு குயிலே! கூவு குயிலே!
மாமர உச்சியேறிக் கூவு குயிலே!

கூவு குயிலே! கூவு குயிலே!
காக்கை செய்த உதவி எண்ணிக் கூவு குயிலே
கூவு குயிலே! கூவு குயிலே!
காதல் செய்து வாழ்க வென்று கூவு குயிலே

கூவு குயிலே! கூவு குயிலே!
நன்றல்லதை மறந்துவிடக் கூவு குயிலே!
தினைத் துணை நன்மை பிறர் செய்து விடினும்
பனைத் துணையாகக் கொள்ளக் கூவு குயிலே!

தினை - சிறிது
பனை - பெரிது
காதல் - அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செருப்பு

காலைப் பாது காக்கவென்று
நாங்கள் அணியும் செருப்புத்தான்
கலர் கலராய்க் கடைகளிலே
இருக்குது பார் செருப்புத் தான்

பஞ்சு போன்ற செருப்பு முண்டு
முள்ளு முள்ளாய் செருப்பு முண்டு
மூதாதையர் அணிந்த செருப்பு
மிதியடி தான் என்று சொல்லு

காலைக் காத்த செருப்புத் தானே
(இ)ராமன் நாட்டைக் காத்தது
பரதன் தலையில் இருந்து கொண்டு
பண்போ டாட்சி செய்தது.


கூடி வாழும் அன்றில் போல
குணம் படைத்த செருப்புத்தான்
ஒன்று போனால் வாழ மறுக்கும்
இணை பிரியா ஜோடி தான்.

மிதியடி - மரத்தினாலான செருப்பு
அன்றில் - பறவை இனம் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம் பழம்

பனம் பழமாம் பனம் பழம்
பாகு போன்ற பனம் பழம்
சூரியனார் சுட்டுத் தந்த
சுவையான பனம் பழம்.

வட்ட வட்டப் பனம் பழம்
வடிவான பனம் பழம்
தலையில் பஞ்சு விலால் நல்ல
தொப்பி போட்ட பனம் பழம்

சுட்டுச் சுவை சேரவே
சூப்பிச் சூப்பி உண்ணலாம்
சொட்டுப் புளி சேர்த்திட்டால்
சோக்காய் நாமும் உண்ணலாம்.

பணியாரமும் செய்யலாம்
பாணிப் பனாட்டாக்கலாம்
இனி யாவரும் இப்பண்டம்
சுவைக்க ஆசை கொள்ளுவீர் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பளப் பூச்சி

செம் பவளம் போல மின்னும்
தம் பளப் பூச்சி
சொறி மழையைக் கண்டவுடன்
அணி திரள் வீர் நீரும்.

அம்பலத்தான் வெற்றிலையைத்
துப்பியதால் வந்த
அழகுருவே எட்டுக் கால்
தம் பளத்துப் பூச்சி.


பட்டு மெத்தை மேனி கொண்ட
தம் பளத்துப் பூச்சி
செங் குழம்புப் பஞ்செனவே
சேர்ந்து வரும் பூச்சி.

புல் வெளிகள் தனில் அழகாய்
ஓடி வரும் பூச்சி
பசுமையிடை செம் முத்தாய்
உலவும் அழகுப் பூச்சி.

அரும்பதங்கள்
அம்பலத்தான் - சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழியும் குஞ்சுகளும்

"கொக்" "கொக்" என்று கூப்பிட்டே
கோழி இரையைக் காட்டவே
"கீச்" "கீச்" என்று ஓடியே
குஞ்சுகள் நிலத்தைக் கொத்துமே.

பட்டு மெத்தை மேனியோடு
பல நிறத்துக் குஞ்சுகள்
சிட்டுக் குருவி போல ஓடிச்
சிறக்க மகிழ்வை ஊட்டுமே.

கள்ளம், கபடம், கோபம், லோபம்
அற்ற வெள்ளை மனத்துடன்
கருடன் வரவும் அறிந்திடாமல்
கவலை இன்றிச் சுற்றுவார்.

அன்னைக் கோழி அருகில் நின்று
விலகிடாமற் குஞ்சுகள்
கண்ணும் கருத்து மாக நோக்கிக்
கருடன் வரவு காட்டவே.

துள்ளி ஓடும் மான்கள் போல
மிக விரைந்தும் ஓடியே
தம்மைக் காக்க அன்னை சிறகுள்
அவசரமாய் ஒதுங்குமே.

பரிவு, பாசம் அரிய நேசம்
கொண்ட கோழிக் குஞ்சுகள்
பிரிந்திடாமல் ஒன்று பட்டால்
உண்டு வாழ் வென்று கூறுதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA JPL
10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெய்யாதோ பெரிய மழை

எங்கள் வயல் களெல்லாம்
வாகுடனே நெல் விளைய
கன்னி மூலை கண பதியே
கனிந்து வரம் தாருமையா
- எங்கள்

பேராறு பெருக் கெடுக்க
அருவி நதி நிரவி வர
தீராத துயர் தீரப்
பெய்யாதோ ! பெரிய மழை
- எங்கள்


எண்ணி நிலம் குளிர
ஏர் முனைகள் கூரேற
கட்டி வைத்த கொம்பறைகள்
முட்ட முட்டப் பொலி பெருக
- எங்கள்

செல்வம் செழித்த நிலம்
சேர்ந் தோரும் வாழும் நிலம்
வண்டினாங்கள் பாடும் வனம்
அத்தனையும் செழிப் புறவே
- எங்கள்

வாகு - அழகு
கொம்பறை - நெல் பாதுகாக்கும் இடம்
பொலி - நெல்



27
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல்

பச்சைக் கதிர்மணி நெல்லு வெட்டி - நல்ல
மாவக்கை அள்ளியே சூடு வைத்து

இச்சைக் கிசைந்த நடையன் கட்டி - மிக
இங்கிதமாகவே சூடடித்து

குல்லம் தனைக் கொண்டு பொலி நூற்றி - நல்ல
குறையின்றி நெல்மணி தான் சேர்த்து

பொலிக் கொடி ஒதுக்கியே கும்பியாக - அதை
சலிக்காது பட்டறை தானும் கட்டி

கழனிக் கரையிலே நெல்குவித்து - பெரும்
கோணிகளில் அதை மூடை கட்டி

நீளக் கதிர் ஓலைப் பாயிலிட்டே வெகு
பக்குவமாகவே காய வைத்து

கோல உலக்கையை கையில் பற்றி - அதை
குற்றியே சேர்ந்த உமி நீக்கி

முத்து முத்தாகவே அரிசி கொண்டு - கதிர்
சூரிய பொங்கலும் பொங்கி நின்றே

பாசிப் பயறு வறுத்துக் குத்தி - பசும்
பாகுடன் மோதகமும் பிடித்தே

தை மகள் சிரிக்க நாம் படைத்தே - வெகு
சந்தோஷமாகவே ஆடிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச்சை - விருப்பம்
நடையன் - உழவு செய்யும் நாம்பன் மாடு
கழனி - வயல்
கோணி - சாக்கு
மாவக்கை - அறுத்த நெற்கதிர் பிடிகளின் சேர்க்கை
குல்லம் - சுளகு
பொலி - நெல்
பொலிக்கெடி - வைக்கோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டுக்கிளி

கூண்டுக்குள்ளே ஒரு கோலக்கிளி - அது
மீள வழியின்றியே துடிக்க
முட்டிய சோகம் அதை வாட்ட - தினம்
திக்கு முக்காடியே தவிக்கிறது.

எட்டி எட்டி அது பார்க்கிறது - வழி
மூடிக் கிடக்கவே வேர்க்கிறது
மட்டில்லாத தன் சுதந்திரத்தை - அது
மாய விட்டே பரி தவிக்கின்றது.

தன்னைப் பிடித்த மனிதனையே - அது
திட்டித் திட்டித் தினம் அழுகிறது
இன்னாது செய்த அம் மனிதனையே - கிளி
சாபமிட்டே பழி போடுதையா

உயிரை வதைக்கின்ற மானிடரே ! - அது
உவந்த செயல் அல்ல கண்டிடுவீர் !
இவ்வதை மீண்டும் உமைச்சூழும் - இதை
சிந்தித்தே உயிர்வதை நீக்கிடுவீர்

இன்னாது - தீமை
உவந்த - நல்ல / விருப்பமான
வதை - துன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

ஆடுவோமே விளை யாடுவோமே
அனைவரும் வாரும் விளை யாடுவோமே
கிட்டிப் புள்ளும் பம்பரமும் எட்டுக்கோடும்
சிறுவர் நாம் சேர்ந்து விளை யாடலாமே.

தாச்சியுடன் பாண்டியும் தாய முருட்டி
போட்டி போட்டே விளை யாடலாமே.
கிட்டியைத் தான் கிரிக்கெட் என்று ஆடுறோமே
இது தமிழன் தந்த ஆட்ட மென்று கூறுவோமே.

வாரோட்டம் பாரும் தம்பி ஓடி வாறான்
வாரும் நாமும் ஓடி விளை யாடலாமே.
கொம்பு முறி நல்ல விளை யாட்டுதானே
போர்த் தேங்காய் அடித்தும் விளை யாடுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்சுருட்டு

கண்ணுக்கழகாய் வெண்சுருட்டு
கடைகளிலெல்லாம் கிடைக்கிறது
எண்ணும் நாகரிக மனிதர்
வாயிலெல்லாம் தவழ்கிறது

சின்னச்சின்ன பயல்களெல்லாம்
தெரியாது ஊதிச் சுவைக்கின்றார்
எண்ணிப்பாரும் இதன் விந்தை
புற்றுநோயே விளைவாகும்

அழகு, இளமை, இவையனைத்தும்
அருகி மெல்ல மறைந்திடுமே
பெருமை யான உடல் மெலிந்து
உருக் குலைய வைத்திடுமே

ஈரல் கருக இரை சுருங்கி
இன்னல் பலவும் நேர்ந்திடுமே
பாசமான அண்ணன் மாரே
வாழ்வீர் ! புகைத்தல் தனை விட்டே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன்

பொன் னான (இ)லங்கையின்
பூர்வீக நாயகன்
ஆற்றலால் உயர்ந்திட்ட
அரும் பெரும் மன்னவன்
தென் கைலை மலை தனில்
செங்கோல் செலுத்தியே
தேவரையும் வென்றவன்
தேசமெலாம் ஆண்டவன்.

ஆரியப் படை தனை
அன்றே எதிர்த்தவன்
அகத்திய மா முனிக்கு
இணை எனக் கண்டவன்
அரும் சாம கீதமே
அருளிய ராவணன்
பெரும் ஆயுர் வேதத்தில்
துறை போன வல்லவன்.

வீணையின் கொடி யினன்
விரி ஞான வழியினன்
ஆன தன் தவத்தினால்
அரன் வாளும் பெற்றவன்
நாக கன்னிகையான
நாயகியை மணந்தவன்
லங்கா புரம் என்னும்
(இ)லங்கையை ஆண்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரம் தனில் வாழும்
பெரும் பேறு பெற்றவன்
நாவார அவர் புகழச்
சைவத்தைக் காத்தவன்
கம்பனின் வம்பினால்
கறை பட்ட நாயகன்
கயமைகள் நீங்கிடின்
தமிழ்த் தெய்வ மேயவன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்

பூர்வீகம் - பழைமையான
செங்கோல் - நல்லாட்சி
விரி - பரந்த
வம்பு - புதுமை
கறை - குற்றம்
கயமை - குறை / குற்றம்

13172CC
KOHA
276663



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி...



ஆசிரியத் தொழிலோடு தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்த திரு. வீரசிங்கம் பிரதீபன் அவர்கள், பல்துறை ஆற்றல்மிக்கவர். இலக்கிய உலகில் இதுவரை ஐந்து நூல்களை வெளியிட்டவர். பல்துறை சார்ந்த வகையிலே இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. தற்போது, கலாசார உத்தியோகத்தராக வவுனியா பிரதேச செயலகத்தில் பணியாற்றும் இவர், எமது பிரதேசத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு பல்வகையிலும் தன்னாலான பங்களிப்பினை வழங்கி வருகின்றார். யாழ் மண்ணிலே பிறந்த இவரது கலைச்சேவை மிகவும் காத்திரமானது.

யாழ் இந்துவில் மைந்தன். பேராதனைப்பல்கலைக்கழக கலைப்பட்டதாரி என்கின்ற தகுதிகளுடன் கவிதை, இலக்கியம், மரபுக்கலைகள், சமய இலக்கியம் போன்றவற்றில் ஆழ்ந்த அறிவுடையவர், அந்தவகையில், இவரது ஆறாவது இலக்கிய முயற்சியாக சிறுவர்களுக்கான கவிதைத் தொகுப்பை வெளியிடுகின்றார். "சிறுவர் சிந்தனைத் தமிழ்" என்ற வகையில், இந்நூல் வெளியாவது சிறப்பாகும். வவுனியாவில் சிறுவர் இலக்கிய முயற்சிகள் மிகக்குறைந்த அளவிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில், பிரதீபனின் "சிறுவர் சிந்தனைத் தமிழ்" காலத்தின் கட்டாய தேவையாக வெளிவருவது சிறப்பாகும்.

பிரதீபன் எழுத்தாளர் மட்டுமன்றி, சிறந்த நாடக இலக்கிய கர்த்தாவும் ஆவர். அவர் எழுதிய பல நாட்டிய நாடகங்களையும் நான் பார்த்திருக்கின்றேன். மரபு வழியும் நவீனத்துவமும் கலந்த இவரது இலக்கியப்பணி மேலும் தொடர வேண்டும் என்பது எனது ஆசை.

**திரு.முத்து.இராதாகிருஷ்ணன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வவுனியா தெற்கு.

ISBN 978-955-7368-03-0
9 789557 368030

VIJAY PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org